டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 140 | 14.11.2025 | FRIDAY | IPPASI : 27 | PRICE : RS.5/-
மலர் : 01 | இதழ் : 140 | 14.11.2025 | வெள்ளிக்கிழமை | ஐப்பசி : 27 | விலை : ரூ.5/-

3 திருச்சி காந்தி மார்க்கெட்டில் மந்தமாக நடைபெறும் வாழைத்தார் வரத்து அதிகரிப்பு : வியாபாரிகள் வேதனை

4 அமெரிக்காவில் 43 நாட்கள் நீடித்த நிதி முடக்கம் முடிவுக்கு வந்தது: மசோதாவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்

2 ராஜபாளையம் அருகே கோயில் கொள்ளை, கொலை வழக்கில் தப்பியோடிய கைதியை சுட்டுப் பிடித்த போலீஸார்

# தமிழக அரசு ஊழியர்களுக்கு 3% அகவிலைப்படி உயர்வு: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை: நவ.14-

தமிழக அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அரசு செய்திக் குறிப்பில், "தமிழ்நாட்டு மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் கொண்டு பல சீரிய முன்னோடி நலத் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. மக்களுக்காக வகுக்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும், அத்திட்டங்களை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் களப்பணியாற்றுவதிலும் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும்




ஆசிரியர்கள்.

அத்தகைய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இவ்வரசு கருத்தில் கொண்டு, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில், முதல்வர் ஸ்டாலின் 01.07.2025 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஒன்றிய அரசு அறிவித்துள்ள அகவிலைப்படிக்கு இணையாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார். இதனால் தற்போது 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, 3 சதவீதம் உயர்த்தப்பட்டு 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1829 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள்/ ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சித்தையன்கோட்டையில் அமைச்சர் பெரியசாமி நூலகத்தை திறந்து வைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களை பார்வையிட்டார்

திண்டுக்கல், நவ.14-

சித்தையன் கோட்டையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் நூலகத்தை திறந்து வைத்து மாணவர்களுக்கு வழங்கப்படும் புத்தகங்களை பார்வையிட்டதோடு தனக்கு அன்பளிப்பாக வரும் புத்தகங்களை ஆத்தூர் தொகுதியில் உள்ள நூலகங்களுக்கு வழங்க அமைச்சர் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வழங்குகிறார்.

திண்டுக்கல் மாவட்டம், சித்தையங்கோட்டை பேருந்துநிலையம் அருகே உள்ள நூலகம் திறப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொன்னு முரளி வரவேற்றார். ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நூலகத்தை திறந்து வைத்து குத்துவிளக்கு ஏற்றினார் அதன்பின்னர் புத்தகங்கள் வைத்திருக்கும் அறையை பார்வையிட்டார். அப்போது கலைஞர் நெஞ்சுக்கு நீதி புத்தகத்தை பார்வையிட்ட அவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் எழுதிய புத்தகங்கள் நூலகத்தில்



எத்தனை உள்ளது. என கேட்டதோடு தனக்கு அன்பளிப்பாக வரும் புத்தகங்கள் அதிகம் உள்ளன. அவற்றை ஆத்தூர் தொகுதியில் உள்ள நூலகங்களுக்கு பகிர்ந்தளிக்க உள்ளேன் என்றார். முன்னதாக பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தலைவர் வார்டு உறுப்பினர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றனர். நிகழ்ச்சியில் திமுக மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, ஒன்றிய செயலாளர் ராமன், மாவட்ட தி.மு.க. கு.சத்தியமூர்த்தி, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், ஆத்தூர் மேற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்றதலைவர் ரேகா அய்யப்பன், சித்தையன்கோட்டை பேரூராட்சி செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் தங்கபாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாக லெட்சுமி சசிகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி தலைமை எழுத்தர் கவின், வார்டு உறுப்பினர்கள் லாவண்யா சுரேஷ், தியாகு, பபிதா பானு, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், குழாய் பொருத்துநர் ஜெயராஜ், கணிணி ஆப்ரேட்டர் பாலா, மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சக்கர வியூகம் செய்தி எதிரொலி

பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்து வந்த இந்து சமய அறநிலையத்துறை ( HR & CE ) மயிலாடுதுறை மண்டலத்தில் உள்ள ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் பணிபுரிந்து வந்த, இரண்டாம் நிலை செயல் அலுவலர் கார்த்திகேயன் நாகப்பட்டினம் மண்டலத்திற்கு பணியிட மாற்றம்

### அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

## சித்தையன்கோட்டை பேரூராட்சி 2வது வார்டில் புதிய நியாய விலைக்கடையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திறந்து வைத்து ரேஷன் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார்

### புதிய நியாயவிலைக்கடை மூலம் 30 நாட்களும் ரேஷன் பொருட்களை பயனாளிகள் பெறலாம்

திண்டுக்கல், நவ.14-

சித்தையன்கோட்டை பேரூராட்சி 2வது வார்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட புதிய நியாய விலைக்கடையை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் திறந்து வைத்து ரேஷன் பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம், சித்தையங்கோட்டை பேரூ்ட்ராட்சிக்குட்பட்ட 2வது வார்டில் இஸ்லாமிய சமுதாய மக்கள் அதிகம் வசிக்கின்றனர். அப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் தங்கள் பகுதிக்கு புதிய நியாயவிலைக்கடை வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். உடனடியாக அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ. 8 லட்சம் ஒதுக்கீடு செய்து புதிய நியாயவிலைக்கடை கடை கட்ட உத்தரவிட்டார். புதிய நியாயவிலைக் கட்டிடப் பணிகள் முடிந்து அதன் திறப்பு விழா செவ்வாய் கிழமை மாலை 6.00 மணி அளவில் நடைபெற்றது. விழாவிற்கு கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் (பொது விநியோகம்) உஷா நந்தினி தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் போதும்பொண்ணு முரளி, துணைத்தலைவர் ஜாகிர்உசேன், சிறுபான்மையினர் அணியைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்லமரக்காயர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். செயல் அலுவலர் ஜெயமாலு வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கலந்து





கொண்ட தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள், புதிய நியாயவிலைக்கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேஷன் பொருட்களை வழங்கிவிட்டு பேசுகையில் இப்பகுதியில் முழுநேர புதிய நியாய விலைக்கடையை திறந்து வைத்ததன் மூலம் இப்பகுதியைச் சேர்ந்த பெண்கள் 30 நாட்களும் ரேஷன் பொருட்களை தங்குதடையின்றி பெறலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. சித்தையங்கோட்டை பேரூராட்சியைப் பொறுத்தவரை பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரில் தொடங்கி வடிகால் வசதி, சாலை வசதி, மின்விளக்கு வசதி உட்பட பல்வேறு நலத்திட்டப் பணிகள் 100 சதவீதம் நிறைவேற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. அடித்தட்டு மக்கள் வசிக்கும் பகுதியில் 2 சமுதாயக் கூடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டதால் அவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதுதவிர இப்பகுதியைச் சேர்ந்த நெல் விவசாயிகளின் நலன் கருதி, நெல் கொள்முதல் நிலையங்கள் கொண்டுவரப்பட்டதால் நெல் விவசாயிகள் மிகவும் பயனடைந்து உள்ளனர் என்றார். நிகழ்ச்சியில் திமுக மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் ராமன், மாவட்ட தி.மு.க. கு.சத்தியமூர்த்தி,

ஆத்தூர் வட்டாட்சியர் முத்துமுருகன், மண்டல துணை வட்டாட்சியர் பிரவீனா, முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாஸ்கரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், கூட்டுறவு சாபர் பதிவாளர் அறிவழகன், கூட்டுறவு சங்க செயலாளர் கணேஷ்பாபு, ஆத்தூர் மேற்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் காணிக்கை சாமி, பேரூராட்சி மன்றதலைவர் ரேகா அய்யப்பன், சித்தையன்கோட்டை பேரூராட்சி செயலாளர் சக்திவேல், பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் தங்கபாண்டி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் நாக லெட்சுமி சசிகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், பேரூராட்சி தலைமை எழுத்தர் கவின், வார்டு உறுப்பினர்கள் லாவண்யா சுரேஷ், தியாகு, பபிதா பானு, பேரூராட்சி துப்புரவு ஆய்வாளர் அபுபக்கர், குழாய் பொருத்துநர் ஜெயராஜ், கணிணி ஆப்ரேட்டர் பாலா, மற்றும் திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்ட ஆட்சியர் வாக்காளர்களுக்கு வேண்டுகோள்

சேலம், நவ.14-

சேலம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் 2026 கணக்கெடுப்பு படிவத்தினை பெற்ற வாக்காளர்கள் அந்த படிவினை தாமதம் என்று பூர்த்தி செய்து வழங்கி திருத்த பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்து வாக்காளர்களிடம் கேட்டுக் கொள்வதாக,மாவட்ட தேர்தல் அலுவலரும்/ மாவட்ட ஆட்சியருமான டாக்டர்,பிருந்தாதேவி



கேட்டுக்கொண்டார்.

சேலம் மாவட்டத்தில் நவம்பர் 4ஆம் தேதி முதல் டிசம்பர் 4ஆம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட உள்ள முதற்கட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு தூரம் சென்று அந்தந்த பாகங்களில் தற்போதைய 2025 வாக்காளர் பட்டியல் பெயர் இடமாற்றம் இருக்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் தனித்தனியாக பெயர் மற்றும் புகைப்படத்தனும் அச்சிடப்பட்ட கணக்கீடு படிவங்களை வழங்கி உள்ளனர்.

# தொடரும் விலை உயர்வால் பணி ஆணைகள் இல்லை: 10 ஆயிரம் பொற்கொல்லர்கள் ஊர் திரும்பினர்



கோவை, நவ.14-

தங்கம் விலை வரலாறு காணாத வகையில் தொடர்ந்து உயர்ந்து வருவதால் போதுமான பணி ஆணைகள் இல்லை. இதனால் பிற மாவட்டங்களை சேர்ந்த 10 ஆயிரம் பொற்கொல்லர்கள் சொந்த ஊர்களுக்குச் சென்றுவிட்டதாக கோவை தங்க நகை தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழில் நகரான கோவை தங்க நகை தயாரிப்பிலும் தேசிய அளவில் புகழ் பெற்றுள்ளது. ஒரு லட்சம் பேர் இத்தொழிலில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். தங்கத்தின் விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்து வருவதால் நகைகளுக்கான பணி ஆணைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தங்க நகை தயாரிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கோவை தங்க நகை தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் முத்து வெங்கட்ராம் 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறியதாவது: கோவையில் 40 ஆயிரம் பொற்கொல்லர்கள் உட்பட சுமார் ஒரு லட்சம் பேர் தங்க நகை தயாரிப்பு தொழிலில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். கரோனா தொற்றுப் பரவலுக்கு முன் தினமும் சராசரியாக 200 கிலோ அளவுக்கு தங்க நகை வணிகம் கோவையில் நடைபெற்று வந்தது.

2020ம் ஆண்டுக்கு பின் தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மத்திய அரசு தங்கம் இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட வரியை 15 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைத்துள்ளது. ஜிஎஸ்டி வரி 3 சதவீதம் விதிக்கப்படுகிறது. உலக சந்தை நிலவரத்துக்கு ஏற்ப தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. தொடரும் விலை உயர்வால் தங்க நகை தயாரிப்புத் தொழில் முற்றிலும் முடங்கியுள்ளது.

திருமணம் உள்ளிட்ட பல்வறு சுப நிகழ்வுகளுக்காக தங்க நகைகளை வாங்குபவர்களால், சில நாட்களில் மட்டும் ஓரளவு வியாபாரம் நடக்கிறது. மற்ற நாட்களில் வியாபாரம் முற்றிலும் முடங்கியுள்ளது. நகைகளுக்கு போதுமான பணி ஆணைகள் கிடைக்காததால் பொற்கொல்லர்கள் பலர் தங்களின் சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டனர். கோவையில் மொத்தம் 40 ஆயிரம் பொற்கொல்லர்கள் உள்ளனர். தற்போது நிலவும் நெருக்கடியான சூழல் காரணமாக 10 ஆயிரம் பேர் தங்களின் சொந்த ஊர்களுக்கு சென்றுவிட்டனர். இவ்வாறு அவர் கூறினார்.

# ராஜபாளையம் அருகே கோயில் கொள்ளை, கொலை வழக்கில் தப்பியோடிய கைதியை சுட்டுப் பிடித்த போலீஸார்



ராஜபாளையம், நவ.14-

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தேவதானம் பெரிய கோயில் கொலை, கொள்ளை வழக்கில் தப்பியோட முயன்ற நாகராஜுவை போலீஸார் காலில் சுட்டுப் பிடித்தனர்.

ராஜபாளையம் அருகே தேவதானம் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில், சேத்தூர் ஜமீனுக்கு பாத்தியப்பட்ட நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி கோயில் உள்ளது. இக்கோயில் தென்பாண்டி நாட்டு பஞ்சபூத தலங்களில் ஆகாயத் தலமாக விளங்குகிறது. இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்துக்கு உட்பட்ட இக்கோயிலில் இரவு நேரக் காவலாளிகள் இருவர், பகல் நேரக் காவலாளியாக ஒருவர் என 3 பேர் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு காவலாளிகள் பேச்சிமுத்து (50), சங்கர பாண்டியன் (65) ஆகியோர் பணியில் இருந்தனர். செவ்வாய்க்கிழமை காலை பகல் நேரக் காவலாளி மாடசாமி கோயிலுக்குச் சென்ற போது, கொடிமரம் அருகே 2 காவலாளிகளும் கொலை செய்யப்பட்டு கிடந்தது தெரியவந்தது. தகவலறிந்து வந்த சேத்தூர் போலீஸார் பேச்சிமுத்து, சங்கர பாண்டியன் ஆகியோரது உடல்களை மீட்டு, பிரேதப் பரிசோதனைக்காக ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

கோயிலில் இருந்த சிசிடிவி கேமராக்கள் உடைக்கப்பட்டு, கேமரா பதிவு உள்ள டிவிஆர் திருடப்பட்டிருந்தது. மேலும், உண்டியல் காணிக்கை மற்றும் கோயிலில் இருந்த குத்துவிளக்குகள் திருடப்பட்டிருந்தன. மதுரை சரக டிஐஜி அபினவ் குமார், எஸ்.பி. கண்ணன் ஆகியோர் கோயிலில் ஆய்வு மேற்கொண்டு விசாரணை நடத்தினர்.

தொடர்ந்து டிஎஸ்பி.க்கள் ராஜா, பஷீனா பீவி, ஆய்வாளர் ரமேஷ் கண்ணன் தலைமையில் 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டு, குற்றவாளிகளை போலீஸார் தேடி வந்தனர்.

இதற்கிடையில், கொள்ளை தொடர்பாக நேற்று முன்தினம் இரவு வடக்கு தேவதானத்தை சேர்ந்த கணேசன் மகன் நாகராஜ் (25) என்பவரை தனிப்படை போலீஸார் கைது செய்தனர்.

திருடப்பட்ட பொருட்கள் மற்றும் ஆயுதங்களை எடுப்பதற்காக நாகராஜை போலீஸார் சம்பவ இடத்துக்கு அழைத்துச் சென்றனர். அப்போது, தான் மறைத்து வைத்திருந்த அரிவாளால் உதவி ஆய்வாளர் கோட்டியப்பசாமியை வெட்டிவிட்டு, நாகராஜ் தப்ப முயன்றார்.

உடனே காவல் ஆய்வாளர் ரமேஷ் கண்ணன், நாகராஜின் காலில் சுட்டுப் பிடித்தார். பின்னர், காயமடைந்த நாகராஜ் ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலும், காயமடைந்த உதவி ஆய்வாளரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார். இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் சிலரை போலீஸார் தேடி வருகின்றனர்.

அப்பாவி போல நடித்து போலீஸாரை ஏமாற்றிய நாகராஜ்: தேவதானம் கோயிலில் நடந்த கொலை, கொள்ளை குறித்த தகவல் அறிந்ததும் ஏராளமான பொதுமக்கள் அப்பகுதியில் திரண்டனர். அப்போது கொலை சம்பவத்தில் ஈடுபட்ட நாகராஜும், பொதுமக்களோடு சேர்ந்து அப்பாவி போல் நின்று கொண்டு, ''குற்றவாளிகளை கைது செய்ய வேண்டும், கொலை செய்யப்பட்டவர்களை பார்க்க அனுமதிக்க வேண்டும்'' எனக் கோரி போலீஸாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

நாகராஜ் மீது ஏற்கெனவே வழிப்பறி, பெண்களுக்கு எதிரான வன்கொடுமை வழக்கு நிலுவையில் உள்ளது. ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை நிபந்தனை ஜாமீனில் வெளியே வந்த நாகராஜ், சேத்தூர் காவல் நிலையத்தில் தினமும் கையெழுத்திட்டு வந்துள்ளார்.

# தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் 5 கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம்





தேனி, நவ.14-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பைபாஸ்சில் தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பழைய ஓய்வூதயத் திட்டத்தை உடனடியாக அமல்படுத்து, 70 வயது பூர்த்தியான ஓய்வூதியர்களுக்கு 10% கூடுதல் ஓய்வூதியம் வழங்கிடு, சத்துணவு அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர் வனத்துறை ஊரக வளர்ச்சித் துறை ஊராட்சி உதவியாளர் ஆகியோர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூபாய் 7850 வழங்கிட, மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை களைந்து அனைத்து ஓய்வூதியர்களுக்கும் முழுமையான சிகிச்சை தொகை வழங்கிட, கமுட்டேசன் பிடித்தம் செய்யும் காலம் 15 ஆண்டுகளை 11 ஆண்டுகளாக குறைத்திட கோரியும், கோஷங்களை எழுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்ச்சியில் கருணாநிதி தலைமையில் இரங்கல் தீர்மானம் மாவட்ட தலைவர் முருகேசன் வரவேற்பு ஜோசப் வாழ்த்துரை ஆதித்தன், மாசாணம்,அகமது சலீம், மாரிமுத்து நன்றி உரை கூறினார் மற்றும் முத்துசாமி உள்ளிட்டோர் பங்கேற்று கண்டனர் கோசங்களை எழுப்பினர்.



# சாலையில் தரையிறங்கிய சிறிய ரக போர் விமானம்: புதுக்கோட்டையில் பரபரப்பு

புதுக்கோட்டை, நவ.14-

திருச்சி புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் நார்த்தாமலை அருகே வானத்தில் பறந்து கொண்டிருந்த சிறிய ரக போர் விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இன்று சாலையில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

திருச்சியில் இருந்து புதுக்கோட்டை வழியாக காரைக்குடி, சிவகங்கை ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்லக்கூடிய முக்கியமான தேசிய நெடுஞ்சாலை ஆக உள்ளது. இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை அருகே இன்று சாலையில் பிற்பகல் அவசரமாக சிறிய ரக போர் விமானம் தரை இறக்கப்பட்டது.

சாலையில் தரையிறக்கப்பட்ட நேரத்தில் வாகனங்கள் எதுவும் செல்லாததால் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. போர் விமானத்தில் 2 பேர் இருந்ததாக கூறப்படுகிறது. போர் விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தரையறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

தகவல் அறிந்ததும் கீரனூர் போலீஸார் மற்றும் வருவாய் துறையின் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். போர் விமானம் தரையிறக்கப்பட்ட தகவல் அறிந்து ஏராளமானோர் திரண்டு பார்வையிட்டனர். விமானம் அருகே யாரையும் நெருங்க விடாமல் போலீஸார் அனுப்பி வைத்தனர்.

போர் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரி செய்வதற்காக தஞ்சாவூர் விமான நிலையத்திலிருந்து பொறியாளர்கள் விரைந்து கொண்டு இருப்பதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# செல்ஃபோன் பயன்பாட்டால் இளம் வயதினருக்கு அதிகரிக்கும் சர்க்கரை நோய் மதுரை ஆய்வு சொல்வது என்ன?




மதுரை, நவ.14-

வெளி விளையாட்டு, நடைப்பயிற்சி இல்லாமல் இருப்பது, அதிக நேரம் தொலைக்காட்சி மற்றும் செல்போன் பயன்பாட்டால் வளர் இளம் பருவத்தினரிடைய சர்க்கரை நோய் அதிகரித்து வருவதாக மதுரை அரசு மருத்துவமனை நிபுணர்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்தது.

தென் தமிழகத்திலேயே மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் முதன் முதலாக சர்க்கரை நோய் சிகிச்சைக்காக தனித்துறை தொடங்கி சிகிச்சை வழங்கப்படுகிறது. அனைத்து வகையான சர்க்கரை நோய்க்கும் சிகிச்சை அளிக்கும் விதமாக, இந்த சிகிச்சைப் பிரிவில் இளஞ்சிறார் டைப் 1 சர்க்கரை நோய் சிகிச்சைப் பிரிவு, கர்ப்பகால சர்க்கரை சிகிச்சைப் பிரிவு, டைப் 2 சர்க்கரை நோய் சிகிச்சைப் பிரிவு, சர்க்கரை கால் பாத கவனிப்பு பிரிவு போன்றவை செயல்படுகிறது. தற்போது 75 ஆயிரம் பேர் பதிவு செய்து சர்க்கரை நோய் சிறப்பு சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

கரோனா தொற்றுக்கு பிறகு வளர் இளம் பருவ சர்க்கரை நோய் பாதிப்பு கடந்த பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட அதிகரித்துள்ளது. இந்த வளர் இளம் பருவ உடல் பருமன் மற்றும் சாக்கரை நோய் பாதிப்பு, பள்ளி செல்லும் சிறுவர், சிறுமியரிடம் எவ்வாறு ஏற்படுகிறது என்பதை மருத்துவ நிபுணர்கள் கள மருத்துவ ஆய்வு செய்துள்ளனர்.

இதற்காக மதுரை சுற்றுப்புறங்களில் உள்ள நகர் மற்றும் ஊரக பள்ளிச் சிறார்கள் 10 முதல் 18 வயது வரை நகர்புற பள்ளிகளில் 1,631 பேர், ஊரகப் பகுதி பள்ளிகளில் 1,564 பேர் என மொத்தம் 3,195 பேர் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். இதில் நகர்ப்புற பகுதியில் 8.8 சதவீதம் பேரும், ஊரகப் பகுதியில் 7.6 சதவீதம் பேரும் உடல் பருமன் பாதிப்பு கண்டறியப்பட்டது. இவர்களுக்கு உயர் இரத்த சர்க்கரை அளவு கண்டறியப்பட்டது. இதில் 2 சதவீதம் பேர் முற்றிலும் சர்க்கரை நோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இந்த உடல் பருமன் உள்ள பள்ளி மாணவர்களில் சுமார் 40 சதவீதம் பேரிடம் கல்லீரல் கொழுப்பு அதிகம் காணப்பட்டது. 34 சதவீதம் பேரிடம் ரத்த அழுத்தம் அதிகரித்து இருந்தது. 20 சதவீதம் பேரிடம் உயர் சதவீதம் கொலஸ்ட்ரால் அளவு கண்டறியப்பட்டது. உடல் பருமனான மாணவிகளிடையே சினைப்பை நீர்க்கட்டிகள் கண்டறியப்பட்டன.

இவை அனைத்துக்கும் அடிப்படை காரணிகளாக உயர் கலோரி நொறுக்குத் தீனிகள், வெளி விளையாட்டு, நடைப் பயிற்சி இல்லாமல் இருப்பது, அதிக நேரம் தொலைக்காட்சி மற்றும் செல்போன் பயன்பாடு, அதிக பிறப்பு எடை, பெற்றோரிடம் சர்க்கரை நோய் ஆகியவையே காரணம் என ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# தீவிரவாத செயல்களை அரங்கேற்றுவதற்காக துருக்கியில் 2 மருத்துவர்கள் சதி திட்டம்: ஜெய்ஷ் இ முகமது அமைப்புடனான தொடர்புகள் அம்பலம்




புதுடெல்லி, நவ,14

டெல்லி செங்கோட்டை அருகே நடைபெற்ற கார் வெடிகுண்டு தாக்குதலில் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 3 மருத்துவர்களில் 2 பேர், துருக்கியில் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர்களை சந்தித்து சதி ஆலோசனையில் ஈடுபட்டது அம்பலமாகி உள்ளது.

டெல்லி செங்கோட்டை அருகே கடந்த திங்கட்கிழமை கார் வெடிகுண்டு வெடித்து சிதறியது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். ஏராளமான வாகனங்கள் தீக்கிரையாயின. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து 'ஒயிட் காலர் தீவிரவாதத்தை' முறியடிக்கும் வகையில் ஜம்மு காஷ்மீர் மற்றும் ஹரியானா காவல் துறை இணைந்து பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக இந்த தாக்குதலை முன்னின்று நடத்திய மருத்துவர் உமர் முகமது நபியின் நெருங்கிய நண்பர் மருத்துவர் முஜம்மில் ஷகீல் மற்றும் மருத்துவர் ஆதில் அகமது ராதர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், ஹரியானாவின் பரிதாபாத்தில் 2,900 கிலோ வெடிபொருட்கள், ஏகே 47 துப்பாக்கிகள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களையும் போலீஸார் கைப்பற்றினர்.

மருத்துவர்களான உமர், முஜம்மில், ஆதில் ஆகிய மூவரும் பாகிஸ்தான் ஆதரவு ஜெய்ஷ் இ முகமது அமைப்புடன் பல மாதங்களாக நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளனர். இந்த அமைப்பின் முக்கிய தலைவர்களை மேற்கூறிய 3 பேரில் 2 பேர் துருக்கியில் சந்தித்து சதி ஆலோசனையில் ஈடுபட்ட தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

டெல்லி குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட ஹுண்டாய் ஐ20 காரைத் தவிர, தீவிரவாத தாக்குதலுக்கு மேலும் 2 கார்களை அந்த மருத்துவர்கள் வாங்கியுள்ள தகவலும் வெளியாகி உள்ளது. இதுகுறித்தும் பாதுகாப்பு படையினர் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். கார் குண்டுவெடிப்பில் காஷ்மீரின் புல்வாமாவைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்டுள்ளதும், அவர்கள் ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்புடன் தொடர்பில் இருந்ததும், இந்த தாக்குதலில் பெண்கள் ஈடுபட்டதும் வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

மும்பை தாக்குதலை போல்... கடந்த 2008ம் ஆண்டு மும்பை தாக்குதலை போன்று தீவிரவாதிகள் டெல்லியில் பல இடங்களில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

டெல்லி மையப் பகுதியில் முக்கிய அடையாளங்களாக திகழும் செங்கோட்டை, இந்தியா கேட், கான்ஸ்டிடியூஷன் கிளப், கவுரி சங்கர் கோயில் உள்ளிட்ட இடங்களில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்ததாக தெரியவந்து உள்ளது.

கடந்த 2008, நவம்பர் 26ம் தேதி மும்பையில் தாஜ்மகால் ஓட்டல், ஓபராய் ட்ரைடென்ட் ஓட்டல், சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் உள்ளிட்ட 12 இடங்களில் தீவிரவாதிகள் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தினர். இதுபோன்ற தாக்குதலை தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்ததாக அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் மேலும் கூறியதாவது: பாகிஸ்தானை தளமாக கொண்ட ஜெய்ஷ்இமுகமது அமைப்பு டெல்லியில் இந்த தாக்குதலுக்கு பல மாதங்களாக திட்டமிட்டு வந்துள்ளது. டெல்லி மட்டுமின்றி குருகிராம், ஃபரிதாபாத்தில் சில இடங்களை குறிவைத்து சக்திவாய்ந்த 200 ஐஇடி குண்டுகளை தீவிரவாதிகள் தயாரித்து வந்துள்ளனர்.

மத வழிபாட்டு தலங்களை குறிவைத்து பதற்றத்தை தூண்டுவதும் அவர்கள் திட்டம். ஜம்மு காஷ்மீரின் புல்வாமா, ஷோபியன், அனந்த்நாக் ஆகிய பகுதிகளை சேர்ந்த மருத்துவர்கள் இந்த சதிச் செயலுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் விரைவில் பரிதாபாத்தில் தங்கள் தளத்தை நிறுவினர்.

அவர்கள் மருத்துவர்களாக இருந்ததால் சந்தேகத்துக்கு இடமின்றி டெல்லியில் எளிதாகச் செல்ல முடிந்தது. பிறகு அவர்கள் வெடிபொருட்களை சேமித்து வைக்க தவுஜ், பதேபூர் டாகா பகுதிகளில் அறைகளை வாடகைக்கு எடுத்துள்ளனர்.

இவர்கள் முன்னதாக தீபாவளி பண்டிகையின்போது மக்கள் கூட்டம் அதிகமுள்ள பகுதியில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்தனர். ஆனால் அதனை செயல்படுத்த முடியவில்லை. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

டெல்லி குண்டுவெடிப்பு வழக்கை விசாரிக்க ஐபிஎஸ் அதிகாரி விஜய் சகாரே நியமனம்: டெல்லி குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமையின் (என்ஐஏ) டைரக்டர் ஜெனரல் விஜய் சகாரே தலைமையில் 10 பேர் கொண்ட குழு நேற்று அமைக்கப்பட்டுள்ளது.

இவர் 1996ம் ஆண்டு ஐபிஎஸ் தேர்வில் கேரளா பிரிவில் வெற்றி பெற்றவர் ஆவார். பின்னர் இவர் என்ஐஏவில் ஐஜியாக பணியாற்றினார். இவர் டெல்லி குண்டுவெடிப்பு வழக்கு விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதைத் தொடர்ந்து விஜய் சகாரே, நாட்டின் உளவுத்துறை தலைவரை நேற்று சந்தித்து டெல்லி குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து ஆலோசனை நடத்தினார்.



# தேனி மாவட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன்

தேனி, நவ.14-

தேனி மாவட்டம், தேனி அல்லிநகரம் நகராட்சி காமராஜர் பேருந்து முனையத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக விழிப்புணர்வு பேரணியை வாக்காளர் பதிவு அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் ரஜத் பீடன் தொடங்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைமுறைக்கு வரப்பெற்று, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் 04.11.2025 முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் இல்லம் தோறும் சென்று. கணக்கெடுப்புப் படிவம் விநியோகம் செய்யப்பட்டு, சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் இன்றைய தினம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரம் இயக்கம் சார்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் மகளிர் சுய உதவிக்குழுவினரின் விழிப்புணர்வு பேரணியியை வாக்காளர் பதிவு அலுவலர் பெரியகுளம் சார் ஆட்சியர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

பதாகைகளை மகளிர் இப்பேரணியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான உதவிக்குழு உறுப்பினர்கள் சந்தி சென்று. பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இப்பேரணி காமராஜர் பேருந்து முனையத்தில் தொடங்கி, தேனி அல்லிநகரம் நகராட்சி அலுவலகம் வரை சென்று நிறைவு பெற்றது. இப்பேரணியில் திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சந்திரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





# திருச்சி காந்தி மார்க்கெட்டில் மந்தமாக நடைபெறும் வாழைத்தார் வரத்து அதிகரிப்பு : வியாபாரிகள் வேதனை

திருச்சி, நவ.14-

இது குறித்து திருச்சி வாழைக்காய் கனி வியாபாரிகள் சங்க தலைவர் கே.பி. பழனிவேல் பிள்ளை கூறும் பொழுது பொதுவாக பனி, குளிக்காலத்தில் வாழைத்தார், வாழைப்பழத்தின் விலை குறைவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு பருவநிலை மாறாக பெய்த காரணத்தால் வாழைத்தாரர்களின் வரத்து அதிகரிகத்து காந்தி மார்க்கெட் டில் அதிக அளவு வாழைத்தார்கள் குவிகின்றனர். இதனால் வியாபாரம் நல்ல படியாக நடைபெறும் என்று அனைவரும் எதிர்பார்த்த நிலையில் மாறாக வாழைத்தார் விற்பனை மந்தமாக நடந்து வருகிறது.

திருச்சி காந்தி மார்க்கெட் வாழைக்காய் மண்டியில் வாழை வரத்து கடந்த 7 மாதங்களாக அதிக வரத்து காரணமாக 600 ரூபாய் விற்பனை செய்த வாழை தார் ரூ80 முதல் ரூ150 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் வாழைத்தார்களை விற்பனை செய்ய முடியாமல் விவசாயிகள், வியாபாரிகள், சில்லறை வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றனர். கடந்த சில நாட்களாக வாழைத்தார் விற்பனை சரியாக நடைபெறாமல் தினமும் பல ஆயிரம் வாழைத்தார்களை குப்பையில் வீசுவது தான்நடந்து வருகிறது இதனை பார்க்கும் பொழுது மொத்த வியாபாரிகளான எங்களுக்கு மன வேதனையாக இருக்கிறது. எனவே

இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வாழைத்தார்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு நெல் கொள்முதல் நிலையம் போன்று வாழை வியாபாரிக்களுக்கு வாழை கொள்முதல் செய்ய அரசு முன் வர வேண்டும் ,

காலம் காலமாக இரண்டு, மூன்று தலைமுறையாக வியாபாரம் செய்து வரும் என்னைப் போன்ற வியாபாரிகள் வாழைத்தார் விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு வேறு தொழிலுக்கு தான் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்படும்.

1000 வாரை தார் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு 300 வாழைத்தார் வீணாக குப்பைக்கு செல்கிறது , திருச்சி காந்தி மார்க்கெட்டில் 2000 வாழை தார்கள் குப்பைக்கு செல்கிறது. இந்த நிலை மாற மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.



■ மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எஸ்.பி.ஜ. அலுவலர் குடியிருப்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர முறைத் திருத்தம் 2026 தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுகளுக்கு சென்று வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை வழங்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார். மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் இ.ஆ.ப., உடன் உள்ளார்.




■ தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் கே.வி.ஏ. மஹாலில் பல்வேறு துறைகளின் சார்பில், பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். உடன் திருப்பூர் மாநகராட்சி 4 ஆம் மண்டலத் தலைவர் பத்மநாபன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா.



■ திருப்பூர் மாவட்டம் உடுமலை அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில் இந்து சமய அறநிலைத்துறை சார்பாக பொள்ளாச்சி பாராளுமன்ற உறுப்பினரும் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் கே ஈஸ்வர சாமி அவர்களுக்கு அறங்காவலர் குழு தலைவர் ஆர். கணேஷ் மூர்த்தி, செயல் அலுவலர் சுந்தரவடிவேல் மற்றும் உறுப்பினர்கள் சசிகுமார் ரவிச்சந்திரன் நாகரத்தினம் மணிகண்ட பிரபு மற்றும் திருக்கோயில் அர்ச்சகர்கள் பணியாளர்கள் எம்பி அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு வழங்கினார்கள் இந்நிகழ்ச்சியில் உடுமலை நகர மன்ற தலைவர் மத்தின் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



■ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஊராட்சி ஒன்றியம் நவலூர் குட்டப்பட்டு ஊராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் ரூபாய் 119.22 கோடி மதிப்பீட்டில் மணிகண்டம் மற்றும் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 174 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் ,தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குனர் ஜி.எஸ். சமீரன் , ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் மொ.பழனியாண்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமை பொறியாளர் என்.ஜெயக்குமார், நிர்வாக பொறியாளர்கள் வி.பரிமளாதேவி, ராஜகோபால், மணிகண்டம் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் கமலம் கருப்பையா,அந்தநல்லூர் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் ச.துரைராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைதிட்டஇயக்குனர்கங்காதாரணி,அரசுஅலுவலர்கள்,பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்கே.என்.நேரு நேற்று திருச்சிமாவட்டம், மணப்பாறை அரசு மருத்துவமனையில்ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் 50 படுக்கை வசதிகள் கொண்ட தீவிர சிகிச்சை பிரிவு கட்டடம் கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார்.இந்நிகழ்வில், மாவட்டஆட்சித்தலைவர்வே.சரவணன் , ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி ,மணப்பாறைசட்டமன்றஉறுப்பினர் ப.அப்துல்சமது , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்டஇயக்குனர் கங்காதாரணி, மருத்துவம்மற்றும்ஊரகநலப்பணிகள்இணைஇயக்குனர் கோபிநாத், பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்) நிர்வாக பொறியாளர்அன்பரசி, மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவர் பணியாளர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், முடிவுற்ற திட்ட பணிகளை துவக்கி வைக்கவும் மற்றும் புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டவும் வருகை தர உள்ளதால் மதுரை கிழக்கு வட்டம், உத்தங்குடியில் உள்ள கலைஞர் திடலில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன் உடன் உள்ளார்.

## திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில்

# TNPSC – Group – II மற்றும் IIA முதன்மை தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தகவல்

திருப்பூர், நவ.14-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அறிவிக்கையின்படி, தொழிலாளர் உதவி ஆய்வாளர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், நன்னடத்தை அலுவலர், சார்பதிவாளர் நிலை – II போன்ற தொகுதி – II பணிகளுக்கும் முதுநிலை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தணிக்கை ஆய்வாளர், உதவியாளர் போன்ற தொகுதி –II A பணிகளுக்கும் என மொத்தம் 645 காலிப்பணியிடங்களுக்கு 28.09.2025 அன்று முதல்நிலைத் தேர்வு நடைபெற்றதை தொடர்ந்து முதன்மைத் தேர்வு விரைவில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டத்தில் TNPSC –Group II மற்றும் IIA முதன்மை தேர்வுக்கான வகுப்புகள் 17.11.2025 அன்று காலை 10.00 மணிக்கு அறை எண். 439 ல் தொடங்கப்படவுள்ளது. மேலும், இப்பயிற்சியில் மாதம் இருமுறை மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட உள்ளன. இத்தேர்வுக்கான இலவசப் பயிற்சியில் கலந்து கொள்ள தங்கள் பெயரை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரிலோ அல்லது 04212999152, 9499055944 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம். மேலும், இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.



■ திருப்பூர் மாவட்ட சிலம்பாட்ட கழகம் மற்றும் உடுமலை ஜீவா சிலம்பம் அசோசியேசன் இணைந்து மண்டல அளவிலான தனித்திறன் சிலம்பாட்டப் போட்டிகள் உடுமலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது இதில் ஒற்றைக்கம்பு சிலம்பம் சுற்றும் முறை இரட்டைக் கம்பு சிலம்பம் சுற்றும் முறை என்ற பிரிவுகளில் ஐந்து வயது முதல் 16 வயதிற்கு உட்பட்ட பள்ளி மாணவ மாணவியர் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் ஒற்றைக்கம்பு சுழற்றும் பிரிவில் ஆர் ஜி எம் மெட்ரிக் பள்ளியை சேர்ந்த நான்காம் வகுப்பு மாணவி ஸ்வஸ்திகா முதல் இடத்தையும் ஒன்றாம் வகுப்பு மாணவி நைனிகா இரண்டாம் இடத்தையும் பிடித்து தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்றனர். இந்தவிழாவில் திருப்பூர் மாவட்ட சிலம்பாட்ட கழக பொதுச்செயலாளர் ரவிச்சந்திரன். ஜீவா சிலம்பாட்ட கழக ஆசான் நந்தகோபால் ஜீவா சிலம்பாட்ட கழக முதன்மை பயிற்சியாளர் சென்னியப்பன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்

## அகவிலைப்படியை 58 சதவீதமாக உயர்த்தி வழங்கிய

# தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மதுரை மாவட்ட தலைவர் இளங்கோ

தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு.

தமிழ்நாட்டு மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் கொண்டு பல சீரிய முன்னோடி நலத் திட்டங்களைத் தீட்டி தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது. மக்களுக்காக வகுக்கப்படும் பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டுவதிலும், அத்திட்டங்களை முழுமையாக மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் களப்பணியாற்றுவதிலும் முக்கியப் பங்கு வகிப்பவர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள்.



அத்தகைய அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இவ்வரசு கருத்தில் கொண்டு, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.07.2025 முதல் மாநில அரசுப் பணியாளர்களுக்கும் ஒன்றிய அரசு அறிவித்துள்ள அகவிலைப்படிக்கு இணையாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதனால் தற்போது 55 சதவீதமாக உள்ள அகவிலைப்படி, 3 சதவீதம் உயர்த்தப்பட்டு 01.07.2025 முதல் 58 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ரூபாய் 1829 கோடி கூடுதல் செலவினம் ஏற்படும். அரசு அலுவலர்கள்/ ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும்.



## தசரா, கந்தசஷ்டி விழாக்களில் 4 லட்சம் பக்தர்களை கையாள உதவிய ‘ஏ.ஐ. ஹைடெக் கட்டுப்பாட்டு’ அறை

தூத்துக்குடி, நவ.14-

குலசேகரன்பட்டினம் தசரா மற்றும் திருச்செந்தூர் கந்தசஷ்டி திருவிழாக்களில் சராசரியாக 4 லட்சம் பக்தர்களை கையாள போலீஸாருக்கு உதவும் வகையில் ஏ.ஐ. தொழில்நுட்ப ஹைடெக் கட்டுப்பாட்டு அறையை நிறுவிய இரு பொறியியல் கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களை காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் நேரில் பாராட்டினார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சராசரியாக 4 லட்சம் பக்தர்கள் பங்கேற்ற குலசேகரன்பட்டினம் தசரா திருவிழா, திருச்செந்தூர் கந்தசஷ்டி திருவிழா ஆகியவை சமீபத்தில் நடைபெற்றன. இவ்விரு விழாக்களிலும் பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளுக்காக ஏ.ஐ. தொழில்நுட்பத்தில் ஹைடெக் கட்டுப்பாட்டு அறை நிறுவப்பட்டது.

காணாமல்போன குழந்தைகளை மீட்க ‘புராஜெக்ட் கார்டியன்’ எனும் செயலி பயன்படுத்தப்பட்டது. வாகனங்கள் நிறுத்தும் இடங்களைக் கண்காணித்தல், போக்குவரத்து நெரிசலை நேரடியாக கண்காணித்தல், மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் தேவைகளை அறிந்து கொள்ளுதல் ஆகியவற்றுக்காக ‘காப்போட் ஏஐ’ எனும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.

இதற்கான ஏ.ஐ. ஹைடெக் கட்டுப்பாட்டு அறையை கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரி, ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பண்ணாரி அம்மன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி ஆகிய இரு கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிறுவி, வழிநடத்தினர். இவ்விரு விழாக்களிலும் தலா 4 நாட்கள் இந்த ஏ.ஐ. கட்டுப்பாட்டு அறை போலீஸாருக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

குழந்தைகள் உடனுக்குடன் மீட்கப்பட்டனர். வாகனங்கள் மற்றும் நகை திருட்டு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டது. இதையொட்டி, இவ்விரு கல்லூரிகளின் பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள், தூத்துக்குடி மாவட்ட காவல் அலுவலகத்துக்கு நேற்று வரவழைக்கப்பட்டனர். அவர்களுக்கு எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிப் பாராட்டினார். காவல் துறை அதிகாரிகள், கல்லூரி பேராசிரியர்கள் உடனிருந்தனர்.



## பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தக்கோரி சென்னை தலைமைச் செயலக ஊழியர்கள் போராட்டம்


சென்னை, நவ.14-

பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தக் கோரி தலைமைச் செயலக ஊழியர்கள் நேற்று மதிய உணவு இடைவேளையின் போது போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழக அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்துவது, மத்திய அரசைப்பின்பற்றி அகவிலைப்படியை ஜூலை 1 முதல் உயர்த்தி வழங்குவது, அரசுத் துறைகளில் உள்ள காலியிடங்களை நிரப்புவது உள்ளிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம் சார்பில் நேற்று மதிய உணவு இடைவேளையின்போது கோரிக்கை முழக்க போராட்டம் நடந்தது.

தலைமைச் செயலகம் அமைந்துள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டிடத்தில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் ஏராளமான அலுவலர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர். இதில், தலைமைச் செயலக சங்க தலைவர் கு.வெங்கடேசன் பேசும்போது, ``திமுகவின் பிரதான வாக்குறுதியான பழைய ஓய்வூதியத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இதுதொடர்பாக அமைக்கப்பட்ட குழுவும் அறிக்கையை சமர்ப்பிக்காமல் காலம் கடத்தி வருகிறது. இது கண்டிக்கத்தக்கது. அதேபோல், அகவிலைப்படியை மத்திய அரசு உயர்த்தி வழங்கியுள்ள நிலையில், தமிழக அரசு இன்னும் உயர்த்தவில்லை. அரசுத் துறைகளில் லட்சக்கணக்கில் காலியிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்பாமல் அரசுப் பணிகள் தனியார்மயமாகி வருகின்றன.

அரசு பணியிடங்களை நிரப்பாமல் தனியார்மயமாக்குவதும் இட ஒதுக்கீடு இல்லாமல் செய்வதும் தான் சமூக நீதியா?'' என்றார். இதற்கிடையே, அரசு ஊழியர் ஒருவர், “தலைமைச் செயலக சங்கம் சரியாக செயல்படவில்லை, 4 ஆண்டு காலம் பொறுமையாக இருந்துவிட்டு தற்போது போராட்டத்தை நடத்துகிறீர்களே?” என்று சங்க நிர்வாகிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் அங்கு சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

## டெல்டா மாவட்டங்களில் நவ.17, 18ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை, நவ.14-

டெல்டா மாவட்டங்களில் நவ.17, 18ம் தேதிகளில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மையணிஇயக்குநர் பா.செந்தாமரை கண்ணன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்மேற்கு, தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இன்று (நவ.13) முதல் 17ம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

17ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. 18ம் தேதி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். தென் தமிழக கடலோரம், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் இன்றும், நாளையும் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் செல்ல வேண்டாம்.

## அமெரிக்காவில் 43 நாட்கள் நீடித்த நிதி முடக்கம் முடிவுக்கு வந்தது: மசோதாவில் கையெழுத்திட்டார் ட்ரம்ப்


வாஷிங்டன், நவ.14-

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் புதன்கிழமை (நவம்பர் 12) இரவு அரசாங்க நிதி மசோதாவில் கையெழுத்திட்டார். இது 43 நாட்களாக நீடித்த அரசின் நிதி முடக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அமெரிக்க நிதியாண்டு செப்டம்பர் 30 ல் முடிவடையும். அக்.1 ல் புதிய நிதியாண்டு தொடங்கும். இதனையடுத்து ஆண்டுதோறும் புதிய நிதியாண்டுக்கான பட்ஜெட் மசோதா செப்.30 ல் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும். அமெரிக்க அரசு இயங்கத் தேவையான ஆண்டு செலவின மசோதாவுக்கு இந்த இரு அவைகளின் உறுப்பினர்களும் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக, 60 சதவீத செனட் உறுப்பினர்கள் ஒப்புதல் அளித்தால் மட்டுமே, அரசின் செலவினங்களுக்கான நிதி விடுவிக்கப்படும். இந்நிலையில், அக்.1 அமெரிக்க நாடாளுமன்றத்தில் 60% உறுப்பினர்களின் ஒப்புதல் கிடைக்காததால் நிதி மசோதா தோல்வியடைந்தது. இதனால் அமெரிக்க அரசு எதிர்கொண்ட நிதி முடக்கம் 43 நாட்களாக நீடித்தது.

இந்த நிதி முடக்கத்தால் அமெரிக்காவில் ராணுவம், எல்லை பாதுகாப்புப் படை, விமானக் கட்டுப்பாட்டுத் துறை உள்ளிட்ட சில அத்தியாவசிய துறைகள் மட்டுமே இயங்கியது. மற்ற துறைகளின் அரசு ஊழியர்கள் பணிபுரியவில்லை, அதுபோல அரசு ஊழியர்களுக்கு ஊதியமும் வழங்கப்படவில்லை.



இந்தச் சூழலில் சில ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களின் ஆதரவுடன், செனட் சபையில் நிதி மசோதா நேற்று நிறைவேறியது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக 222 வாக்குகளும், எதிராக 209 வாக்குகளும் பதிவானது. மசோதா நிறைவேறிய இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு கையெழுத்திடும் விழா நடந்தது.

மசோதாவில் கையெழுத்திடும் முன்பு பேசிய ட்ரம்ப், “இன்று நாங்கள் மிரட்டிப் பணம் பறிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்ற தெளிவான செய்தியை சொல்லியுள்ளோம். நான் அமெரிக்க மக்களுக்கு ஒன்றை சொல்ல விரும்புகிறேன், நீங்கள் இதை மறந்துவிடக் கூடாது. இடைக்காலத் தேர்தல்கள் வரும்போது ஜனநாயக கட்சியினர் நம் நாட்டுக்கு என்ன செய்தார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.” என்றார்.

இந்த மசோதா ஜனவரி 30ம் தேதி வரை அரசுக்கான நிதியுதவியை நீட்டிக்கும். இதனால் அரசின் அத்தனை துறைகளும் இனி செயல்பட ஆரம்பிக்கும். அனைத்து அரசு ஊழியர்களும் பணிக்கு திரும்புவார்கள், அவர்களுக்கு ஊதியமும் வழங்கப்படும்.

## “பழம் நமக்குத்தான்” அன்புமணி உற்சாகப் பேச்சு



சென்னை, நவ.14-

“தேர்தல் ஆணையம் என்னை அங்கீகாரம் செய்துவிட்டார்கள். மாம்பழம் சின்னத்தை நமக்குதான் தேர்தல் ஆணையம் ஒதுக்கி உள்ளது; அதை ஒன்றும் செய்ய முடியாது” என்று பாமக தலைவர் அன்புமணி தெரிவித்தார்.

இது தொடர்பாக சென்னையில் நேற்று நடைபெற்ற பாமக நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய அவர், “மாம்பழம் சின்னத்தை தேர்தல் ஆணையம் நமக்குத்தான் ஒதுக்கி இருக்கிறது. இதை எதிர்த்து நீதிமன்றம் சென்றாலும் எதுவும் நடக்காது. ராமதாஸை அங்கு உள்ளவர்கள் தவறாக வழிநடத்தி கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கட்சிக்கும் ராமதாஸுக்கும் உண்மையாக உழைத்தேன்.

இனியும் உண்மையாக உழைப்பேன். தேர்தல் நேரத்தில் திமுகவினர் பூத்தில் இறங்கி வேலை பார்ப்பார்கள். எதில் கவனம் செலுத்த வேண்டுமோ அதில் கவனம் செலுத்துவார்கள். நாம் தேர்தலுக்கு முன்பு வரை களத்தில் இறங்கி போராடுவோம். அவ்வளவு உழைப்பை நாம் போடுவோம். ஆனால், அவர்கள் பூத் கமிட்டியில் கவனம் செலுத்தி ஜெயிக்கிறார்கள்.

இதை நாம் சரி செய்துவிட்டால் நாம் தான் ஆளுங்கட்சி. இதுபோன்ற நிறைய விஷயங்களை நிர்வாகிகளாகிய நீங்கள் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். கட்சிக்காக 200 இளம் பேச்சாளர்களை உருவாக்க வேண்டும். வீடுதோறும் திண்ணைப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். இன்னும் 5 மாதத்தில் நீங்களெல்லாம் அமைச்சர்களாகப் போகிறீர்கள்” என்று நிர்வாகிகளை உற்சாகப்படுத்தினார்.

## தமிழகம் உட்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்

சென்னை, நவ.14-

(எஸ்ஐஆர்) நவம்பர் 4ம் தேதி முதல் டிசம்பர் 4ம் தேதி வரை மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் மொத்தம் 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் உள்ளன.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் 68,467, வாக்குச்சாவடி நிலை முகவர்கள் 2,11,445. அச்சடிக்கப்பட்ட கணக்கீட்டு படிவங்களின் எண்ணிக்கை 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 582 (100 சதவீதம்). விநியோகிக்கப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் எண்ணிக்கை 5 கோடியே 67 ஆயிரத்து 45 (78.09 சதவீதம்) என்று இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில், “வாக்குச்சாவடி நிலை முகவர்களை நியமிப்பதற்கான மாற்றியமைக்கப்பட்ட அறிவுறுத்தல்களை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. பொதுவாக, வாக்காளர் பட்டியலின் குறிப்பிட்ட பாகத்தில் பெயர் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் ஒரு வாக்குச்சாவடி நிலை முகவராக இருப்பார்.

இப்போது, வாக்காளர் பட்டியலின் குறிப்பிட்ட பாகத்தில் பெயர் பதிவு செய்த வாக்குச்சாவடி நிலை முகவர் கிடைக்காத பட்சத்தில், அதே சட்டப் பேரவை தொகுதியில் பெயர் பதிவுசெய்யப்பட்ட எந்தவொரு வாக்காளரும் வாக்குச்சாவடி நிலை முகவராக நியமிக்கப்படலாம்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர் தனது நியமிக்கப்பட்ட பகுதியின் வரைவு வாக்காளர் பட்டியலில், இறந்த அல்லது இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பதிவுகளை அடையாளம் காணும் பொருட்டு. ஆய்வு செய்வதற்கு முற்படுவர். தமிழகத்தில் 2,11,445 வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்டுள்ளனர்” என்று தெரிவித்துள்ளார்.

## மேகேதாட்டு குறித்த கர்நாடக முதல்வர் கருத்துக்கு திமுக அரசு வாய் திறக்காதது ஏன்? - ஓபிஎஸ் கேள்வி



சென்னை, நவ.14-

‘முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காவிரியில் மேகேதாட்டு அணையால் தமிழகத்துக்குப் பாதிப்பு இல்லை என்று கர்நாடக முதல்வர் கூறியிருப்பது கேலிக்கூத்தாக உள்ளது. கர்நாடக முதல்வரின் கருத்து தமிழகத்தைப் பாலைவனமாக்க வழி வகுக்கும். இதன்மூலம், உபரி நீரையும் தமிழகத்துக்கு தரக்கூடாது என்ற கர்நாடக அரசின் தீய எண்ணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேகேதாட்டு அணையை கர்நாடக அரசு கட்டினால், தமிழகத்துக்கு வரும் உபரி நீரும் நின்றுவிடும். இந்தத் திட்டம் கர்நாடகத்துக்கு மட்டும்தான் பயனளிக்கும். எனவே, மேகேதாட்டு அணை திட்டத்தால் தமிழகத்துக்கு பாதிப்பு இல்லை என்ற கூற்று கடும் கண்டனத்துக்குரியது. இதுகுறித்து திமுக அரசு வாய் திறக்காமல் இருப்பது ஏன்?

உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேகேதாட்டு அணை குறித்து உண்மைக்குப் புறம்பான கருத்துகள் கூறுவதை கர்நாடக முதல்வர் இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஆர்டிஇ கீழ் சேர்க்கப்பட்ட மாணவர்கள் விவரம்: தனியார் பள்ளிகளுக்கு ஐகோர்ட் அவகாசம்

சென்னை, நவ.14-

கல்வி உரிமைச் சட்டத்தின் படி தனியார் பள்ளிகள் 25 சதவீத இடங்களை ஏழை மாணவர்களைக் கொண்டு நிரப்ப வேண்டும். இந்நிலையில், 25 சதவீத இட ஒதுக்கீட்டில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் விபரங்களை அக்டோபர் 17ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என தனியார் பள்ளிகள் இயக்குநர் சுற்றறிக்கை வெளியிட்டார்.

இந்த சுற்றறிக்கையை எதிர்த்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தனி நீதிபதி, கல்விக் கட்டணத்தை திருப்பி வழங்கும் வகையில் மட்டுமே இந்த சுற்றறிக்கை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, மாணவர்களின் விவரங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அக்டோபர் 31ம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டிருந்தார். தனி நீதிபதியின் உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு தனியார் பள்ளிகள் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு தனியார் பள்ளிகள் தாளாளர்கள் நலச் சங்கம் சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மேல்முறையீட்டு மனுக்கள், நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார் மற்றும் ஹேமந்த் சந்தன் கவுடர் முன் விசாரணைக்கு வந்தபோது, கல்வி உரிமைச் சட்ட 25% ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கைக்கான இணைய தளத்தை திறக்காததால், அனைத்து இடங்களையும் பள்ளிகளே நிரப்பி விட்டதாகவும், தற்போது குறுகிய கால அவகாசத்தில் கல்வி உரிமைச் சட்டத்தில் இடஒதுக்கீடு பெற தகுதியான மாணவர்கள் பட்டியலை தயாரிக்க இயலாது என மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

தமிழக அரசுத்தரப்பில், அரசு உத்தரவை ஏற்று பல பள்ளிகள் மாணவர்கள் பட்டியலை அனுப்பியுள்ளன. இந்த பட்டியலை சரிபார்த்து, அந்த பள்ளிகளுக்கு மாணவர்களின் கல்விக்கட்டணம் திருப்பி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் பட்டியலை அனுப்புவதற்கான காலக்கெடுவை நீட்டிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டதை ஏற்ற நீதிபதிகள், மாணவர்கள் பட்டியலை அனுப்பாத பள்ளிகளுக்கான கால அவகாசத்தை, நவம்பர் 30 ஆம் தேதி வரை நீட்டித்து உத்தரவிட்டனர். பட்டியலைப் பெற்று சரிபார்க்கும் நடவடிக்கைகளை துவங்க அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், மேற்கொண்டு கால அவகாசம் கோரக் கூடாது எனக் கூறி, வழக்கை முடித்து வைத்தனர்.

## வரலாறு காணாத அளவில் கரியமில வாயு வெளியேற்றம்: காலநிலை மாற்றத் திட்டத்தின் உதவி இயக்குநர் தகவல்

சென்னை, நவ.14-

வரலாற்றில் இல்லாத அளவுக்கு இந்தியாவில் கரியமில வாயு (கார்பன் டை ஆக்சைடு) வெளியேறி உள்ளதாகவும், மின் கட்டமைப்பு அதிக கார்பன் அடர்த்தியானதாக மாறியுள்ளதாகவும் தமிழ்நாடு காலநிலை மாற்றத் திட்டத்தின் உதவி இயக்குநர் கிரிஷ் பால்வே தெரிவித்துள்ளார்.

ஜி.எஸ்.ஹெச் இந்தியா லிமிடெட் நிறுவனம் சார்பில் நிலையான எரிசக்தி மாற்றம் குறித்த கருத்தரங்கம் சென்னை கிண்டியில் நேற்று நடைபெற்றது. ‘பசுமைப் பொறியியலின் ஈடுபாடு’ என்ற தலைப்பில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தமிழக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு காலநிலை மாற்றத் திட்டத்தின் உதவி இயக்குநர் கிரிஷ் பால்வே பங்கேற்று உரையாற்றினார்.

அவர் பேசியதாவது: ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட அறிக்கையின்படி, 2024ல் இந்தியா தனது வரலாற்றில் இல்லாத அளவுக்கு அதிகபட்சமாக 57,700 மில்லியன் டன் கரியமில வாயுவை வெளியிட்டுள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 7 சதவீதம் அதிகமாகும். இதற்கு நிலக்கரி சார்ந்த அனல் மின் நிலையங்களே 40 சதவீதத்துக்கும் மேல் காரணமாகும். நாட்டில் புதைபடிவமற்ற



எரிசக்தி திறன் தற்போது பாதியளவை எட்டியுள்ளன. இருப்பினும், நமது மின் கட்டமைப்பு கணிசமான அளவில் அதிக கார்பன் அடர்த்தியானதாக மாறியுள்ளது.

அதன்படி 2020க்கும் 2024க்கும் இடையில், ஒரு மெகாவாட் மணி நேர மின்சாரத்துக்கு வெளியேற்றப்படும் கரியமில வாயுவின் அளவு 0.703 டன்னில் இருந்து 0.727 டன்னாக அதிகரித்துள்ளது. இதற்கு காரணம், சூரிய மற்றும் காற்றாலைகள் 15 முதல் 25 சதவீதத்துடன் மட்டுமே செயல்படும் நிலையில், நிலக்கரி ஆலைகள் 65 முதல் 90 சதவீதம் வரை தொடர்ந்து இயங்குவதே ஆகும்.

இந்திய எரிசக்தி திறன் பணியகத்தின் திட்டங்கள் மூலம் 2017 முதல் 2023 வரை 1.29 பில்லியன் டன் கரியமில வாயு வெளியேற்றம் தவிர்க்கப்பட்டு ரூ.7.6 லட்சம் கோடி சேமிக்கப்பட்டுள்ளது. எனவே, எரிசக்தி திறன் தூய்மையான எரிசக்தி உத்தியின் மையமாக இருக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்வில் மணிப்பூர் ஐஐஐடி இயக்குநர் கே. பாஸ்கர், இந்திய தொழில் துறை கூட்டமைப்பின் முதன்மை ஆலோசகர் எஸ்.ரகுபதி, கேரள எரிசக்தி மேலாண்மை மையத்தின் இயக்குநர் ஆர்.ஹரிக்குமார், இந்திய பசுமைக் கட்டிட கவுன்சில் சென்னை தலைவர் எஸ்.மகேஷ் ஆனந்த், ஜி.எஸ்.ஹெச் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி எம்.நூருல் அமீன் பங்கேற்றனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000